1981 மே 6]

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10-00]

2. தகவல் கோரல்.

அ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். தமிழ்நாட்டில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆயிரக் கணக்கில் கைதாகிக் கொண்டு இருக்கிறார்கள். அது பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. 7, 8 ஒத்தி வைப்புத் தீர்மானங்களைக் கொடுத்துவிட்டு, எல்லாம் ஒரே நாளில் வர வேண்டுமென்றால் எப்படி முடியும்?

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : தலைவரவர்களே, நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது மறுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை எல்லாம் அவையிலே கேட்கக் கூடாது. என்னுடைய அறையிலே கேட்க வேண்டும்.

ஆ. அரசு அலுவலர்கள் போராட்டம்.

திரு. மு. அம்பிகாபதி : சார், பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். தலைவரவர்களே, இன்றைக்கு ஒரு கொந்தளிப்பான நிலைமை உருவாகி இருக்கிறது. அரசு அலுவலர்கள் எல்லாம் இன்று ஒரு மணி நேரம் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது கொந்தளிப்பான நிலைமை இல்லை ; அவர்கள் போராட்டம் இன்றைக்கு இல்லை ; நீங்கள் அமைதியடையலாம்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, திரு. அம்பிகாபதி அவர்கள் சொல்வது, அந்த " கான்பிரன்டேஷன் அவாய்ட்" பண்ணப்பட வேண்டும். அதற்கு என்ன ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பிரச்சனையில் இருக்கிற முக்கியத்துவத்தை நான் மறுக்கவில்லை. இன்றைக்கு அவர்களுடைய போராட்டம் இல்லை; 14-ந் தேதிக்கு வைத்து இருக்கிறார்கள். உங்களுடைய எண்ணங்களை நான் வரவேற்கிறேன்; ஆனால் இன்றைக்கு அந்தப் பிரச்சனை இல்லை.

3. அறிவிப்புகள்.

திருவாளர்கள் துரைமுருகன், உகம்சந்த், திருமதி யசோதா ஆகியோர் கொடுத்திருந்த உரிமைப் பிரச்னைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. துரைமுருகன் அவர்களும் திருமதி டி. யசோதா அவர்களும் பேரவையின் 246-வது விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சனையைப் பேரவையில் எழுப்ப என் இசை வைக் கேட்டு அறிவிப்புக் கொடுத்துள்ளனர். மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் 15—4—1981 அன்று பேரவையில் அறிவித்த தன்னிலை விளக்கத்தில் கூறப்பட்ட சில கருத்துக்கள் தவறானவை என்றும், பேரவைக்கு வேண்டுமென்றே தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் கொடுத்துள்ளார் என்றும் அவர்கள் குறிப்பிட்டு உள்ளனர்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்களும் "முரசொலி" நாளேட்டின் மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சனையைப் பேரவையில் எழுப்ப என் இசைவைக் கேட்டுள்ளார். அதுவும் அவர் குறித்த தன்னிலை விளக்கம் குறித்தது தான்.

பேரவையைப் பொறுத்தவரையில் ஒரு மாண்புமிகு உறுப்பினர் தாம் ஒரு காரியம் செய்யவில்லை, அல்லது தான் அப்படி நியமிக்கவில்லை என்று கூறினால் பொதுவாக அதைத்தான் ஏற்க வேண்டும் என்பதுதான் மரபு. உரிமை மீறல் பிரச்சினையைக் கொடுத்த உறுப்பினர்கள் தம் கருத்துக்கு ஆதாரம் எதுவும் கொடுக்கவில்லை. எனவே இவை பற்றிய முடிவு எடுக்க வேண்டுமானால் வேறு ஆதாரங்களிலிருந்துதான் எடுக்க வேண்டும். இதன் மூலப் பிரச்சினை நீதி மன்றத்தின் முன் விசாரணையில் இருப்பதால், இவை பற்றிய கருத்துக்களைப் பேரவையில் இதுதான் சரி, இது சரியல்ல என்று கூறாமல் இருப்பதுதான் முறையாகும். வழக்கு முடியும் வரையில் இப் பிரச்சினை குறித்துப் பேரவையில் எழுப்பாமல் இருப்பதுதான் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, இங்கு கூறப்பட்ட பிரச்சினைகளை எழுப்ப அடிப்படை ஆதாரங்கள் இல்லாததால் அவற்றை எழுப்ப என் இசைவை அளிக்கவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.